கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் மட்டும்தான் அதிகமான நிதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தோல் தொழில் நிறுவனங்கள் private sectors ஆக இருக்கின்றன. அரசு எந்த நிதியும் அதில் செலவு செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தோல் தொழில் நிறுவனங்கள்தான் இந்த அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு இந்த விடுதிகளைக் கட்டித் தர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், சென்னை மற்றும் அதன் 5 புறநகர்ப் பகுதிகளிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 7 ஆயிரம் தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் 105 கோடி ரூபாய் செலவில் தூங்கும் அறைகள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் பொதுப் பணித் துறையின்மூலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம், எழிச்சூர் கிராமத்திலும், தையூர் பி. கிராமத்திலும் கட்டப்பட்ட தங்கும் அறைகள் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

பேருந்து வசதி

***29240—திரு. ஒய். பிரகாஷ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தாரவேந்திரம் ஊராட்சி, பி.பி. பாளையம் முதல் ஒசூர் வரை பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

2018 மே 29]

(அ) மற்றும் (ஆ) பி.பி. பாளையம் முதல் ஓசூர் வரையிலான வழித் தடத்தினுடைய நீளம் சுமார் 46 கி.மீ. ஆகும். மேலும், பி.பி. பாளையம் கிராமத்தில் சுமார் 150 பேர் மட்டுமே உள்ளனர். அரசு ஆணைப்படி மக்கள்தொகை 1,000-க்கு மேல் உள்ள கிராமங்களுக்கு மட்டுமே பேருந்து வசதி செய்திட இயலும் என்பதால், தற்சமயம் பி.பி. பாளையம் கிராமத்திலிருந்து ஓசூருக்கு பேருந்து வசதி செய்திட இயலாத நிலை உள்ளது. இருப்பினும் பி.பி. பாளையத்திலிருந்து 0.5 கி.மீ. நடைப்பயண தூரமே உள்ள காலேநெட்டி கிராமத்திலிருந்து ஒரு பேருந்து 6 நடைகள் வீதம் இயக்கப்படுகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதி, தாரவேந்திரம் ஊராட்சி, பி.பி. பாளையம் கிராமத்திலிருந்து பேருந்து இயக்கப்பட வேண்டும் என்று கேட்டேன். இந்த தாரவேந்திரம் ஊராட்சிக்கே பேருந்து வசதி இல்லை. தாரவேந்திரம் ஊராட்சியில் கிட்டத்தட்ட 4, 5 பெரிய கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரும் ஓசூர் அல்லது தேன்கனிக்கோட்டை, தளிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 4, 5 கிலோ மீட்டர் தூரம் நடந்தே சென்று பேருந்தில் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஓசூரிலிருந்து கெலமங்கலம் செல்லும் பேருந்துகள் அதாவது, அகொண்டபள்ளியிலிருந்து கெலமங்கலம் செல்லும்போது நடுவில் எந்தக் கிராமமும் கிடையாது. அங்கே செல்லக்கூடிய பேருந்துகள் அதாவது பைரமங்கலம், தம்மண்டறபள்ளி, கலுகொண்டபள்ளி வழியாகச் சென்றால், பல கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள், மாணவர்கள் ஆகியோருக்கு பயனுள்ளதாக இருக்கும். அதேபோல், தேன்கனிக்கோட்டையிலிருந்து கெலமங்கலம் வழியாக பமதத்தனூர் செல்லக்கூடிய பேருந்துகள், 25, 34 எண் கொண்ட பேருந்துகள்கூட கெலமங்கலத்திலிருந்து நேரடியாகப் பமதத்தனூருக்குச் செல்லும்போது ஒரே ஒரு கிராமம்தான் நடுவில் வருகின்றது. ஆகவே, அந்தப் பேருந்துகள்கூட புல்லட்டி, ரத்தினகிரி, கொத்தூர் ஆகிய கிராமங்கள் வழியாகச் சென்றால் கிட்டத்தட்ட 10, 15 கிராமங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதால் உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வழித்தடங்களில்

பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இயக்கப்படுகின்ற பேருந்துகளின் வழித்தடங்களை மாற்றி இயக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அவர் கூறுகின்ற அந்த வழித்தடங்களை எழுத்துப்பூர்வமாகக் கொடுத்தால் ஏற்கெனவே இயக்கப்படுகின்ற ஊர்களில் பிரச்சினை வராமல் இருக்குமாயின், அவர் கூறுகின்ற அந்த வழித்தடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு, தேவை ஏற்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலை நேரத்தில் திடீர் திடீரென்று பேருந்துகளை நிறுத்தி விடுகிறார்கள். ஏனென்று கேட்டால், 30 நபர்களுக்குக் குறைவாக இருந்தால், இயக்குவதற்கு இயலாது என்று சொல்லி அலுவலர்கள் பயணிகளைப் பேருந்துகளிலிருந்து கீழே இறக்கிவிட்டுவிட்டு, பேருந்துகளை பணிமனைக்கு எடுத்துச் செல்கிறார்கள்.* Collection *சரியாக இல்லாத காரணத்தினால்தான், பேருந்துகளை இயக்குவதில்லை என்று அதிகாரிகள் என்னிடத்தில் கூறுகிறார்கள். தயவுசெய்து, இந்த அரசை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால்,* collection-ஐ *குறிக்கோளாக வைக்காமல், மக்கள் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பேருந்துகளை நிறுத்தாமல் இயக்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2018 மே 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை சபையில் தெரிவிக்கிறார். அவர் கூறுகின்ற அந்த வழித்தடத்தில் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 30 சதவிகிதம்தான் இருக்கிறது. 1,000 நபர்களை மக்கள்தொகையாகக் கொண்ட கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய வேண்டும் என்று அரசாணைகள் இருந்தாலும், 500 நபர்களை மக்கள் தொகையாகக் கொண்ட கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து கொடுத்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காலத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பயணிகளை இறக்கிவிட்டு பேருந்துகளை இயக்காமல் எடுத்துச் சென்றதாக வரலாறு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். உங்கள் ஆட்சியில் வேண்டுமானால் அப்படி ஏதாவது நடந்திருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அறிவுரையின்படி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய எங்கள் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில், எந்தக் காலத்திலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் தேவையில்லாததைச் சொல்ல வேண்டாம் என்றும், அதைத் தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.